
JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 02 | April 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10

உலகத்தோடு ஒத்து வாழ்ந்தது போதும்,
உறவுகளுக்காக காத்திருந்தது போதும்; இனி...

## சிலுவையும் நானும்...



# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

## உள்ளே...



08


17


26


30


இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

# சிலுவை!

*எனக்கு அன்பான வாலிப மகனே(ளே) இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் ஈஸ்டர் தின நல்வாழ்த்துக்கள்!*

தேவனுக்காக எரிந்து பிரகாசிக்கிற உங்களுடைய சாட்சியையும், ஊழிய வாஞ்சையையும் அறிந்து தேவனை துதிக்கிறேன். வாலிபர்கள் விசுவாசிகளாய் மாத்திரமல்ல, இயேசுவின் சீஷர்களாக, திரள்கூட்டமாக எழும்ப வேண்டும் என்பது தேவனுடைய வாஞ்சை.

சீஷன் என்பவன் தன் குருவைப் (இயேசு) போலவே, தனக்காக வாழாமல், தன்னையும் கொடுப்பவனாக இருப்பான். இன்றைய கிறிஸ்தவ வாலிபர்கள் இயேசுவுக்காக எதையும் தியாகம் செய்யும் இருதயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒருசிலர் ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்டுகிறார்கள், அவருக்காக தங்கள் பள்ளி, கல்லூரி மற்றும் வேலை ஸ்தலங்களில் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருக்கிறார்கள்.

ஆனால் பெரும்பாலானோர் இயேசுவுக்காக வாழ வேண்டும் என்ற எண்ணமற்றவர்களாய் இருப்பது தான் கவலைக்குரிய ஒன்றாக இருக்கிறது. சிலுவையின் அடையாளத்தை கழுத்தில் Pendantஆக அணிவதும், சிலுவை அடையாளத்தை தங்கள் சரீரங்களில் வரைந்து கொள்வதும் தான் கிறிஸ்தவம் என்று நினைக்கிறார்கள். கிறிஸ்துவை உடையவர்களாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் அற்றவர்களாய் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு கிறிஸ்தவ வாலிபனும், நான் சாட்சியாக வாழ வேண்டும், இரட்சிப்பின் அனுபவம் உடையவனாக இருக்க வேண்டும். மேலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்களாய் தங்கள் பள்ளி, கல்லூரிகளில் வலம் வர வேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்களாக எழும்ப வேண்டும்.

இப்படி ஒவ்வொரு கிறிஸ்தவ வாலிப மகனும், வாலிப மகளும் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவர்களாக எழும்பும்போது, அந்த பள்ளி, கல்லூரி மற்றும் வேலை ஸ்தலங்களில் தேவனுடைய பிரசன்னமும், மகிமையும் அந்த இடத்தை நிரப்பும். அப்பொழுது தேவன் விரும்பும் எழுப்புதல் கல்வித்துறையில் பரவும்.

சிலுவையில் இயேசு கிறிஸ்து நமக்காக சம்பாதித்துக் கொடுத்த இலவசமான இரட்சிப்பை மறக்காமல் பகிர வேண்டும். மறுக்காமல் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். உனக்காக உன் இரட்சகர் மரித்து உயிர்த்து இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார் என்பதை உறுதியாய் சொல்ல வேண்டும். நரகத்தின் நிரந்தர வாசியாக இருக்க வேண்டிய நம்மை, சிலுவையில் தன் சொந்த இரத்தத்தை சிந்தி, நம்மை இரட்சித்தார்.



**எனக்கன்பான வாலிபனே, வாலிப மகளே,**
**சிலுவையின் மேன்மையை ஒருநாளும் மறவாதே!**
**இயேசு உனக்காக சிந்தின இரத்தத்தின் வல்லமையை உணர ஒரு நாளும் தவறாதே!**
**இயேசுவின் சீஷனாகிய நீ, ஒருநாளும் சிலுவையின் நிழலை விட்டு விலகாதே!**
**அப்பொழுது நீ ஒரு பவுலாகவும், பேதுருவாகவும் மாறி, இயேசுவுக்காக இறுதிவரை சிலுவை சுமக்க முடியும். இனி உலகமும், அதின் ஆசை இன்பங்கள் அல்ல;**
**நீயும் இயேசுவும், நானும் சிலுவையும் என்று உறுதியாய் நில்!**

கிறிஸ்துவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்

சாட்சி தொகுப்பு: காட்வின்

# நிறைவேறிய கனவு

**தென் தமிழகத்தில் பிறந்து, பல இன்னல்களைச் சகித்து குடும்பத்தில் முதல் மருத்துவராகியிருக்கும் DR. JIHANS அவர்களுடைய மருத்துவ படிப்பின் அனுபவங்களை கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**




**உங்களுடைய குடும்பம், சிறு பிராயம் மற்றும் பள்ளிப் படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

எனது பெயர் ஜிஹான்ஸ். எனது அப்பா ஒரு இஞ்சினியர், அம்மா வீட்டில் இருக்கிறார்கள். தம்பி இஞ்சினியரிங் படித்துக் கொண்டிருக்கிறான். சிறு வயதிலிருந்தே மருத்துவராக வேண்டும் என்பதே எனது இலட்சியமாக இருந்தது. மருத்துவம் இல்லை என்றால் இஞ்சினியரிங் படிக்கலாம் என்ற எண்ணமே எனக்கு இல்லை. மருத்துவராக வேண்டும் என்பதே ஒரே இலட்சியமாக இருந்தது. எனது சின்ன வயதிலிருந்தே அதாவது 1ஆம் வகுப்பு படிக்கும்போதே, பைபிளில் "I want to become a doctor" என்று எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் எழுதி வைத்து ஜெபித்திருக்கிறேன். சின்ன வயதிலிருந்தே எனக்குள் டாக்டராக வேண்டும் என்ற ஆசை ஆழமாக இருந்தது. எனது குடும்பத்தில் யாருமே டாக்டர் கிடையாது. அதனால் அதைப் பற்றி எனக்கு எந்த ஐடியாவும் இல்லை. நான் தான் எனது குடும்பத்தில் முதல் தலைமுறை டாக்டர். இந்தப் படிப்பு எப்படி இருக்கும் என்ற எந்த ஐடியாவும் எனக்கு இல்லை. எனது சிறு வயதில் எனது அப்பா எங்களை மிகவும் அன்போடு வளர்த்தார்கள். அதனால் சிறுவயதில் ரொம்ப கஷ்டமான சூழ்நிலையை நான் பார்த்ததே இல்லை. ஆனால் எனது அப்பா நிறைய சிரமங்களை அனுபவித்து தான் எங்களை வளர்த்தார்கள்.

**சரி... உங்களைக் கஷ்டப்பட்டு கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள்... உங்களுடைய கல்லூரி படிப்பு எப்படி இருந்தது?**

நான் 11ஆம் படித்துக் கொண்டிருக்கும்போது தான் NEET வந்தது. இப்பொழுது எல்லாருக்கும் NEET என்றால் என்ன என்று தெரியும். ஆனால் நான் படிக்கும்போது NEET ஆரம்பித்த 2ம் வருடம்; எப்படி படிக்க வேண்டும் என்று தெரியாது. எங்களுக்கு எந்த ஐடியாவும் இல்லை. அந்த நாட்களில் எங்களுடைய ஸ்டேட் மார்க் எதுவுமே கிடையாது என்று சொன்னார்கள். அதனால் நான் நீட் தேர்வுக்காக மட்டுமே கவனம் செலுத்தி படித்து வந்தேன். வெள்ளிக்கிழமை வரைக்கும் பள்ளிப் பாடங்களைப் படிப்பேன். சனி, ஞாயிறு நீட் வகுப்புக்கு சென்று அதற்காகப் படிப்பேன். நான் Average studentஆக இருந்தாலும் அதைப் படித்து முடிப்பது என்பது பெரிய சவாலாகவே இருந்தது.



நீட் தேர்வு முடிந்து counselling ஆரம்பித்து விட்டது. NEETல் basic மதிப்பெண் வாங்குவதே ரொம்ப கடினமாக இருந்தது. ஆனாலும் கடினமாகப் படித்துத் தேர்வு எழுதி வெற்றி பெற்றேன். மருத்துவம் படிக்க வேண்டுமானால் அதிக பணத்தேவைகள் உண்டு. பீஸ் கட்ட தேவையான பணத்தை மிகவும் சிரமப்பட்டு கட்டி என்னை படிக்க வைத்தார்கள். அதுமட்டுமல்லாமல் தேவன் கூடவே இருந்து தேவைகளையும் சந்தித்து பீஸ் கட்ட உதவி செய்தார். படிக்கவும் உதவி செய்தார்.



### ஒரு வழியாகக் கல்லூரி படித்தீர்கள்... கல்லூரி அனுபவங்களை சொல்ல முடியுமா?

நான் 12ஆம் வகுப்புவரை என் பெற்றோரை விட்டு எங்கும் சென்றது கிடையாது. முதல் முறையாக வீட்டை விட்டு, என் பெற்றோரை விட்டுத் தனியாகச் சென்றது அப்போதுதான். முதலாம் ஆண்டு படிக்கும்போது நிறைய பிரச்சனைகள் வந்தது. அப்போது இதை விட்டுப் போகலாம் என்று கூட நினைத்திருக்கிறேன். முதலாம் ஆண்டு மிகவும் கஷ்டமாகத் தான் போனது. எல்லாமே புதிதாக இருந்தது. நிறைய படிக்க வேண்டும், ஆனால் என்ன படிக்க வேண்டும் என்று தெரியாது; மிகவும் கஷ்டமாக இருந்தது.

### கடினமான கல்லூரி வாழ்க்கையை எப்படி கடந்து சென்றீர்கள், உங்களுடைய தேர்வு நாட்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

இரவு பகல் என்று பாராமல் படிக்க வேண்டும். தேர்வு நாட்களில் சாப்பிடவே மனம் வராது. Practical நாட்களில் மிகவும் கஷ்டமாக இருக்கும். தேர்வு நாட்களில் மிகவும் பயமாக இருக்கும். பயத்தில் படித்தது மறந்து போனது மாதிரி இருக்கும். தூக்கம் வரும், ஆனால் தேர்வை நினைக்கும்போது தூங்க முடியாது. தேர்வு நாட்களில் 3 மணி நேரம் தூங்குவதே அதிகம். 4 மணிக்கு எழும்ப வேண்டும் என்று நினைத்துப் படுத்தாலும், சீக்கிரமாகவே முழிப்பு வந்துவிடும். உடனே சங்கீதம் 34ஐ எடுத்து வாசிக்கும்போது மிகவும் அழுகையாக இருக்கும். ஆனால் வாசித்து முடித்தவுடன், மிகவும் சந்தோஷமாக இருக்கும். அதன்பிறகு எனது பாடங்களைப் படிக்க ஆரம்பிப்பேன். படிக்கும் நாட்களில் நிறைய கஷ்டங்கள் வந்தபோது, என் தோழிகள் எனக்கு எல்லாவற்றிலும் உறுதுணையாக இருந்தார்கள்.



அதனால் எல்லா பிரச்சனைகளையும் என்னால் சரியாகக் கையாள முடிந்தது. இப்படித்தான் எனது கல்லூரி வாழ்க்கை இருந்தது. கல்லூரியில் 15 முதல் 20 கிறிஸ்தவ மாணவிகள் இருந்தோம். நாங்கள் எல்லா ஞாயிற்று கிழமையும் காலையில் 1 மணி நேரம் பைபிள் வாசித்து, ஜெபிப்பதற்கு என்று ஒரு fellowship வைத்திருந்தோம். அது எங்களை இன்னும் பெலப்படுத்தியது. தவறாமல் அதில் இணைந்து ஜெபித்து வந்தோம்.

### பட்டப்படிப்பின் கடைசி தருணங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

எனக்கு ரிசல்ட் வந்த தருணமே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தேர்வு எழுதும்போதே ஒரு பாடம் கொஞ்சம்



கஷ்டமாக இருந்ததால், எனக்கு அந்தப் பாடத்தைக் குறித்து மிகவும் பயமாகவே இருந்தது. இயேசப்பா, மீண்டும் நான் அந்தக் கல்லூரியில் சென்று படிக்க முடியாது என்று ஜெபித்தேன். கர்த்தருடைய கிருபையால் எல்லா பாடத்திலும் நான் வெற்றி பெற்றேன். அந்தத் தருணத்தை என்னால் மறக்கவே முடியாது. 5 வருடங்கள் படிப்பதற்கு பட்ட கஷ்டங்கள் எல்லாமே 1 நிமிடம் என் கண் முன்னால் வந்து போனது. இதற்காகத் தான் 5½ வருடங்கள் கஷ்டப்பட்டிருக்கிறோம் என்பதை நினைத்து மிகவும் சந்தோஷமாக இருந்தது. என்னுடைய சிறுவயது கனவு நிறைவேறியதை நினைத்து மிகவும் சந்தோஷமடைந்தேன்.

**உங்களைப் போல் மருத்துவம் படிக்க ஆயத்தமாகும் பிள்ளைகளுக்கு நீங்கள் என்ன ஆலோசனைக் கொடுப்பீர்கள்?**

Average Student, பெலவீனம் மற்றும் பயத்துடன் இருந்த என்னால் படிக்க முடியுமானால், மருத்துவம் படிக்க வேண்டும் என்ற இலக்கோடு படித்துக் கொண்டிருக்கிற உங்களாலும், உங்கள் இலக்கை அடைய முடியும். கஷ்டப்பட்டு கடினமாகப் படியுங்கள், முதலாவது ஆண்டவர் சமூகத்தில் சென்று ஜெபியுங்கள். எனக்கு ஞானம் கொடுத்த இயேசு கண்டிப்பாக உங்களுக்கும் கொடுப்பார். NEET எழுத ஆயத்தமாகிக் கொண்டிருக்கலாம், டாக்டருக்குப் படித்துக் கொண்டு இருக்கலாம், நீங்கள் தேர்வுக்கு ஆயத்தமாகும்போது எதையும் யோசிக்காமல் முழு கவனத்தோடு படியுங்கள், ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வார். கடினமாக, கவனமாக ஜெபித்து படிக்கும்போது தேர்வு நேரத்தில் என்ன கேள்வி வரும் என்பதை இயேசு உங்களுக்குச் சொல்லிப் படிக்க வைப்பார்.

**அன்பான வாலிபர்களே, டாக்டர் ஜிஹான்ஸ் அவர்களுடைய வாழ்க்கையில் கடினமான பாதையிலும், பெலவீனப்பட்ட நேரத்திலும் கர்த்தர் கூட இருந்து பெலப்படுத்தி நடத்தி வந்தார். 5½ வருடங்கள் பட்ட கஷ்டங்கள் மாறி இன்றைக்கு ஒரு மருத்துவராக இருக்கிறார்கள். தூக்கத்தை விட்டுக் குடும்பத்தை விட்டுப் பிரிந்த சூழ்நிலைமைகள் மத்தியிலும் கர்த்தர் கூட இருந்து காரியங்களை நடத்த முடியுமானால், இன்றைக்கு உங்களையும் நடத்த முடியும் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். ஜெபத்துடன் செயல்படுங்கள்! வெற்றி நிச்சயம்!**



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு 4 விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் எது சரியான விடை என்பதை கண்டுபிடித்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1) ஆபேல் கொலை செய்யப்பட்ட பிறகு ஆதாமுக்கு பிறந்த குமாரன் யார்?
   a) மகலாலெயேல் b) யாரேத் c) சேத் d) கேனான்
2) நகோமியை வழியனுப்பி தன் தேசத்திற்கு திரும்பிச் சென்ற மருமகள் யார்?
   a) ஓர்பாள் b) ரோதை c) சப்பீராள் d) பில்காள்
3) யாக்கோபுக்கு 12 குமாரர்களும், 1 குமாரத்தியும் இருந்தார்கள். குமாரத்தி பெயர் என்ன?
   a) மீகாள் b) தீனாள் c) தொற்காள் d) தியானள்
4) போவாசின் மனைவியாகிய ரூத்தின் முதல் புருஷன் யார்?
   a) தெர்த்துல்லு b) யூபால் c) யாபால் d) மக்லோன்
5. சௌந்தரியமுள்ளவனும், உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் ஒரு பழுதும் இல்லாதிருந்தவனும் யார்?
   a) அப்சலோம் b) சாலொமோன் c) நாத்தான் d) அம்னோன்
6. சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனாயிருந்த மேய்ப்பன் யார்?
   a) தாவீது b) ஆமோஸ் c) மோசே d) ஆபேல்
7. அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்த அடிமையான மனிதன் யார்?
   a) பென்யமீன் b) காயீன் c) யோசேப்பு d) லாமேக்கு

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.04.2025**




**கடந்த மாத வெற்றியாளர்**
**சகோ. மோசஸ், திருப்பூர்**
அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

1) கீலேயாத்திலிருக்கிற யாபேஸின் ஸ்திரீகள் (நியா. 21:12,14)
2) பினெகாசின் மனைவி (1 சாமு. 4:19)
3) அன்னாள் (1 சாமு. 1:5)
4) ஓர்பாள் (ரூத் 1:4; 4:10)
5) ரூத் (ரூத் 4:10)
6) நகோமி (ரூத் 4:16)
7) மீகாள் (2 சாமு. 6:16)
8) மேரப் (1 சாமு. 14:49)
9) யோபுவின் மனைவி (யோபு 2:9)
10) சேபாவின் ராஜஸ்திரீ (1 இராஜா. 10:1)
11) ரெபேக்காள் (ஆதி. 24:15)
12) ராகேல் (ஆதி. 30:1)
13) எத்தோரில் அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீ (1 சாமு. 28:24)
14) ஆகீத் (2 சாமு. 3:4)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

ஆலோசனை: அரி

# விலகி ஓடு!!




*அண்ணா. நான் 11ஆம் வகுப்பு படித்து வருகிறேன். நான் சிறுவயதிலிருந்தே பள்ளியில் எல்லா வகுப்பிலும் நன்றாகப் படிப்பேன். 10ஆம் வகுப்பில் 480க்கும் மேல் மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றேன். 11ஆம் வகுப்பில் எனக்குப் பிடித்த Groupல் சேர்ந்து நன்கு படித்தேன். நான் யாரிடமும் அதிகமாகப் பேசமாட்டேன். மிகவும் shy type. ஆனால் என்னுடைய வகுப்பு ஆசிரியை என்னிடம் அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். பாடத்தைத் தவிர்த்து. என்னுடைய personal காரியங்களைக் குறித்து பேசுகிறார்கள். சில நேரம் என்னை அவர்கள் தொட்டு பேசுகிறார்கள். நெருக்கமாகப் பழகுகிறார்கள். வகுப்பில் எல்லோரும் சென்றபிறகு என்னிடம் தனிமையில் பேசுகிறார்கள். அப்பொழுது இதைப் பார் என்று அநாகரீகமான வீடியோக்களைக் காட்டுகிறார்கள். என்மீது மிகவும் அன்பு இருப்பது போல் Gift கொடுக்கிறார்கள். எனக்கு இது சரியாகத் தெரியவில்லை. எனவே தனிமையாகப் பேசுவதை தவிர்ப்பதினால் என்மீது கோபப்படுகிறார்கள். தேவை இல்லாமல் திட்டுகிறார்கள். வகுப்பில் எல்லோர் முன்பும் என்னை Insult பண்ணுகிறார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இந்தப் பிரச்சனையால் என்னால் சரியாகப் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. யாரிடமும் சொல்ல முடியவில்லை... Help பண்ணுங்க pls. - ராஜ். ஆந்திரா.*

அன்புத் தம்பி ராஜ், உங்கள் பிரச்சனை நன்கு புரிகிறது. சக மாணவர்களால் பிரச்சனை என்றால் ஆசிரியரிடம் புகார் அளிக்கலாம், உதவி கேட்கலாம். ஆனால் உதவி செய்ய வேண்டிய ஆசிரியரே தவறான எண்ணத்தோடு பழகும்போது யாரிடம் சென்று உதவி கேட்பது, புகார் அளிப்பது என்று தயங்கி நிற்பது நன்கு புரிகிறது.

ராஜ், ஆசிரியையாக இருந்தாலும் எல்லையை மீறுவது தவறு. அநாகரீகமாகப் பேசுவதும், பழகுவதும் ஒரு ஆசிரியருக்கு அழகு அல்ல. எனவே நீங்கள் ஒதுங்கி இருப்பதும், ஓடிப் போவதும் உங்களுக்கு நல்லது.

பாடமும், பண்பும், ஒழுக்கமும் கற்றுக் கொடுத்து ஒரு மாணவனை ஒரு மாணிக்கமாக மாற்ற வேண்டிய ஆசிரியை, ஒரு மாணவனின் வாழ்க்கையை அழிப்பது கண்டிக்க வேண்டிய செயல். ராஜ், உங்கள் சிந்தையிலும் மனதிலும் இது தவறான உறவு, தடை செய்ய வேண்டிய உணர்வு என்பதை மனதில் ஆழமாக கொள்ள வேண்டும். ஒரு மாணவனைத் தன்னுடைய பிள்ளையாகப் பாவித்து அவனை உயரத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய ஆசான், ஆபாசமாகப் பேசுவதும், பழகுவதும் மிகத் தவறு. எனவே முதலாவது விலகி நிற்பதும். ஒதுங்கி ஓடுவதும் உங்களுடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆனால் இன்றைய மீடியாக்களில் இதுபோன்ற தவறான உறவுகளைக் காண்பிப்பதாலும் Famous Actors நடிப்பதாலும், இது சரியான உறவு, இதில் எந்தத் தவறும் இல்லை; இதுவும் ஒருவிதமான அன்பு; நல்ல உறவு என்று சொல்லி, தவறான உறவையும் அசுத்தமான உணர்வுகளையும் இதுதான் சரியான கலாச்சாரம் என்று ISI, AGMARK முத்திரை போடுகிறார்கள். இப்படி மீடியாவில் தவறான பழக்கங்களை கலாச்சாரமாக காண்பிக்கிறார்கள். எனவே ராஜ், கவனமாக இருக்க வேண்டும்.

## ஒருவேளை இந்தத் தவறான உறவைத் தொடர்ந்தால் என்ன விபரீதம் நடக்கும்?

- இந்த தேவையற்ற பேச்சு பின்னாளில் தவறான செயலில் கொண்டு போய் விடும். அது ஆபத்தானது. விபரீதமானது.
- உங்களுடைய படிப்பு, எதிர்கால கனவு எல்லாமே சூனியமாகப் போய்விடும். தவறான உறவில் இருந்தவர்கள் என்று பள்ளிக்குத் தெரிந்து உங்களை School Management Dismiss செய்யலாம்.
- உங்கள் நிமித்தம் உங்களுக்கு, உங்கள் பெற்றோருக்கு ஒரு பெரிய அவமானம் உண்டாகும்.
- தவறு செய்து விட்டோமே என்ற குற்ற மனசாட்சி அனுதினமும் உங்களை வேதனைப்படுத்திக் கொண்டே இருக்கும்.
- சமுதாயத்திலும் உங்களுக்கிருக்கும் நல்ல பெயரை நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள்.
- அதனால் மனசோர்வு வந்து பின்னர் மனமுறிவு ஏற்பட்டு தவறான முடிவிற்கு போக வாய்ப்பு உண்டு.

## ஒருவேளை இந்த உறவைத் தவிர்த்தால்...



- உங்களுடைய படிப்பில் மீண்டும் கவனம் செலுத்தி உயர்வின் உச்சத்திற்கு சென்று அடையலாம்.
- உங்களை நம்பி இருக்கும் பெற்றோருக்கு உங்களால் பெருமை, மகிழ்ச்சி கிடைக்கும்.
- மாணவர்கள் மத்தியில் நீங்கள் ஒரு சிறந்த ஒழுக்கமுள்ள மாணவனாகத் திகழலாம்.
- அந்த ஆசிரியையின் ஆசைக்கு இணங்கிப் போகாததால் உங்களை அவர்கள் குறை கூறலாம், ஏன் குற்றமேபடுத்தலாம். ஆனால் உங்கள் தீர்மானத்தில் நிலைத்து நிற்கும்போது, நிச்சயம் மேன்மை உண்டு. ஒருநாளும் பாவமான செயலுக்கு உடன் போக வேண்டாம்.

ராஜ், உங்கள் வாழ்க்கையைப் போல் வேதத்தில் யோசேப்பு என்ற இளம் வாலிபன், ஒரு பெண் தவறு செய்ய அழைக்கும்போது, அவன் அந்தப் பெண்ணை விட்டு ஓடியே போய் விட்டான். தன்னுடைய இளம் வாலிப பருவத்தில் பரிசுத்தமாக வாழ வேண்டும், ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் அவனுடைய இருதயத்தில் இருந்தது. அந்த உயர்ந்த தீர்மானம் பின்னர் அவனை உச்சத்திற்கு கொண்டு சென்றது,

எனவே சிந்தித்து செயல்படுங்கள்! இயேசப்பா உங்களுக்கு உதவி செய்வார். உங்களைப் பரிசுத்தமாக, ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்வார்.

**வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவருமாகிய *தேவனுடைய கிருபை உங்களோடு இருக்கும் (யூதா 1:24). எனவே பயப்படாமல் பழுதற்ற வாழ்க்கை வாழ ஆசைப்படுங்கள்! இயேசு உதவி செய்வார்!!***



# விடுவிக்கும் சிலுவை

*'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக. (கலாத்தியர் 6:14).*



செய்தி:
மோகன் சீ. லாசரஸ்







பவுல் இயேசுவுக்கு விரோதமாகவும், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாகவும் எழும்பி இயேசுவை அறிவிக்கிற வர்களை சிறையில் அடைத்து அவர்களை மிகவும் கொடுமைப்படுத்தி திருச்சபைக்கு மிகுந்த உபத்திரவத்தை கொடுத்தவர். யூத பாரம்பரியத்தின் மீது மிகவும் பக்தி வைராக்கியம் உள்ள ஒரு மனிதராக இருந்தார். அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பவுலுக்கு பிரத்தியட்சமாக தன்னை வெளிப்படுத்துகிறார். பவுலின் வாழ்க்கை மாற்றப்படுகிறது. இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம் என்று அறிந்து அவரை தன் வாழ்க்கையில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறார். அதற்கு பிறகு இயேசுவோடு வாழ்கிற அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட இவர் தான் ஏராளமான திருச்சபைகளை ஸ்தாபித்தார். சபை எப்படி இருக்க வேண்டும்? தேவனுக்குள் எப்படி வளர வேண்டும் என்பதைப்பற்றி தேவன் இவர் மூலமாக அநேக நிருபங்களை எழுதினார். இயேசு கிறிஸ்துவின் சிலுவையோடு ஒன்றித்த வாழ்க்கையை அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். இவர் எழுதின நிருபங்களை கவனமாக வாசிக்கும் பொழுது வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ ஒவ்வொரு நிருபத்திலும் இயேசுவின் சிலுவையைக் குறித்து அவர் எழுதியிருப்பதை நம்மால் பார்க்க முடியும். அந்த சிலுவை பாவத்தின் கொடூரத்தை வெளிப்படுத்துகிறது.

ஒரு கள்ளனைப் போல 2 கள்ளர்களுக்கு நடுவில் வானத்துக்கும் பூமிக்கும் நடுவாக அந்த சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார். சங்கீதம் 33:16ம் வசனத்தில் வாசிக்கிறபடி அந்த தேவன் மனிதனாக வெளிப்பட்டு இயேசு என்ற பெயரில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார் என்பதாக வேதம் குறிப்பிடுகிறது.





வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதபடி (ஏசாயா 66:1) என்று சொன்ன சர்வ வல்லமையுள்ள தேவன்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வத்தையும் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவன் (சங் 121:2).

நட்சத்திரங்களின் இலக்கங்களை எண்ணி அவைகளின் பெயர் சொல்லி அழைக்கிற சர்வ வல்லமையுள்ள தேவன் (சங். 147:4).



**வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் ஏன் அந்த சிலுவையில் தொங்க வேண்டும்? அவர் என்ன பாவம் செய்தார்?**

அரசாங்கத்திற்கு விரோதமாக கலகம் செய்கிறவர்கள், கொலையும் கொள்ளையும் செய்யக்கூடியவர்கள், சமுதாயத்துக்கு தீங்கு இழைக்கக் கூடியவர்கள், அப்படிப்பட்ட கொடூரமான குற்றவாளிகளுக்கு தான், அந்த நாட்களில் ஆட்சி செய்த ரோம அரசாங்கம் சிலுவை மரணம் என்ற கொடிதான மரணத்தை வழங்கி வந்தது. இயேசு என்ன பாவம் செய்தார்? என்ன குற்றம் செய்தார்? ஏன் இயேசு சிலுவைக்கு செல்ல வேண்டும்? அவருடைய வாழ்க்கையை கூர்ந்து கவனித்துப் பார்த்தால்; இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் காரியோத்து மூன்றரை ஆண்டு காலம் இயேசுவோடு இருந்தவன். இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி நன்றாக அறிந்திருந்தவன். இயேசு குற்றம் அற்றவர், அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை அப்படிப்பட்ட ஒருவரை நான் காட்டிக் கொடுத்து விட்டேனே என்று அவன் கதறுவதை வேதம் நமக்கு சொல்லுகிறது (மத். 27:4). இயேசு கிறிஸ்துவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு ரோம கவர்னர் பிலாத்துவினிடத்தில் அனுப்புகிறார். அவர் விசாரித்துவிட்டு மரண தண்டனை கொடுக்கும் அளவுக்கு ஒரு குற்றத்தையும் அவரிடத்தில் காணவில்லை என்று சொல்வதை நாம் வாசிக்கிறோம் (யோவான் 19:4).

நூற்றுக்கு அதிபதியின் போர் வீரர்கள் மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன், இவர் வித்தியாசமானவர், பாவம் செய்யாதவர், எந்த தவறும் செய்யாதவர், தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுக்கிறார்கள். அவரை விரோதித்தவர்களோ, பொறாமை கொண்டு குற்றம் சொன்னவர்களோ, நேரடியாக இயேசுவைப் பார்த்து இயேசுவினிடத்தில் குற்றம் உண்டு என்று சொல்ல முடியவில்லை அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ்ந்தவர் இயேசு.

**இப்படிப்பட்ட குற்றமில்லாத வாழ்க்கை வாழ்ந்த இயேசு கிறிஸ்து நம்முடைய அக்கிரமங்கள் நிமித்தம் காயப்பட்டு, நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் நொறுக்கப்பட்டார்.** நம்முடைய பாவங்களே அவரை சிலுவைக்கு கொண்டு சென்றது. பாவம் எவ்வளவு பயங்கரமானது என்பதை சிலுவை நமக்கு வெளிப்படுத்துகிறது. இன்றைக்கு நீங்களும் ஒருவேளை பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். உங்களுடைய மதுபான பழக்கம், போதைப்பழக்கம், கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சைகள், பெருமை, வைராக்கியம், மற்றவர்களை குறித்து புறம் கூறுதல், அந்தரங்க வாழ்க்கையில் காணப்படுகிற பாவம், இப்படி ஏதோ ஒரு பாவத்தை நீங்கள் சாதாரணமாக எண்ணிக் கொண்டிருக்கலாம். அந்த பாவத்தின் பயங்கரம் தான் தேவ குமாரனை சிலுவைக்கு கொண்டு சென்றது. பரிசுத்தமுள்ள தேவனை சிலுவையில் தொங்கும்படியாய் வைத்தது. நம்முடைய பாவங்களின் நிமித்தம் அவர் சிலுவையிலே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (கலா. 1:4). நம்முடைய பாவம் தான் அவரை அந்த கோர சிலுவைக்கு கொண்டு சென்றது. நம்முடைய பாவம் பயங்கரமானது. அது பரிசுத்தமுள்ள தேவனையே ஒரு பாவியாக சிலுவையில் தொங்க வைத்தது.

அன்பான வாலிப மகனே(ளே) நீ இயேசுவை அறிந்திருந்தும், ஆலயத்திற்கு சென்றிருந்தும், இயேசு உனக்காக மரித்திருப்பதை அறிந்திருந்தும் இனியும் எவ்வளவு நாட்கள் பாவம் செய்து அவரை சிலுவையில் அறைந்து வேதனைப்படுத்தப் போகிறாய்? இன்னும் எவ்வளவு நாள் பாவத்தினால் சங்கடப்படுத்த போகிறாய்? நீ சிலுவைக்கு நேராய் திரும்பும்படியாய் உன் பாவத்தை விட்டு மனந்திரும்பும்படியாய், ஒரு பரிசுத்த வாழ்க்கைக்கு உன்னை அர்ப்பணிக்கும்படியாய் ஆண்டவர் இன்றைக்கு உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறார். சிலுவையில் தொங்கும் இயேசுவை நோக்கிப் பார்! இன்றைக்கே மனந்திரும்பி இயேசுவண்டை ஓடிவா!

முகப்பு செய்தி: சதீஷ்

# சிலுவையும் நானும்



உலகம் முழுவதும் சிலுவையைக் குறித்த படங்களைத் தேவாலயங்களிலும், வீடுகளிலும், ஆலய கோபுரங்களிலும் பார்க்க முடிகிறது. கிறிஸ்தவர்கள் சிலுவையை தங்களது கழுத்தில் அடையாளமாக அணிந்திருப்பதும், சில கிறிஸ்தவர்கள் தவக்காலங்களில் மட்டும் சிலுவையை தங்கள் நெற்றியில் அடையாளப்படுத்தி கொள்வதும் வழக்கமாகி உள்ளது. இப்படி கிறிஸ்தவர்களின் வாழ்வில் சிலுவை என்பது ஒரு அடையாளமாக மட்டுமே உள்ளது. ஆனால் இயேசு தன்னை பின்பற்றி வரும் எல்லாரையும் நோக்கிச் சொன்ன வார்த்தை என்னவெனில், "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23).

சிலுவை என்றாலே பாடுகள், உபத்திரவங்கள், நிந்தனைகள், அவமானங்கள் என்று அநேகர் சொல்வதுண்டு. ஆனால் இவையெல்லாம் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. நீங்கள் சுமக்க வேண்டிய சிலுவையை கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இயேசு சிலுவையில் பாடுகள் அனுபவித்தது மட்டுமல்லாமல், தன் அன்பையும், மன்னிப்பையும், இரக்கத்தையும், இரட்சிப்பையும் வெளிப்படுத்தினார். தன்னை அவமானப்படுத்தி நிந்தித்து ஈவு இரக்கமின்றி அடித்தவர்களுக்கும், அவருக்குப் பொல்லாப்பு செய்தவர்களுக்கும் இயேசு இரக்கம் பாராட்டி அவர்களை நேசித்து, எல்லாவற்றையும் சிலுவையில் சகித்து, **"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்"** (லூக்கா 23:34). இவைகளைத்தான் இயேசு சிலுவையில் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். சிலுவை என்பது வெறும் பாடுகள் மட்டுமல்ல, உங்களை நிராகரித்து, அவமானப்படுத்தி குற்றப்படுத்தியவர்களையும் மன்னித்து அவர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்பதையே இயேசுவின் சிலுவை பாடுகள் நமக்குப் போதிக்கிறது.





நீங்கள் மற்றவர்களை மன்னிக்க வேண்டுமானால் இயேசுவைப் போல எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள பழக வேண்டும். **“கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்”** (கலா. 2:20). ஒவ்வொரு நாளும் நீங்கள் கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்படும்பொழுது இந்தப் பூமியில் பிழைத்திருப்பீர்கள். அதாவது உங்களுடைய பழைய மனுஷனையும், மாம்சத்தையும் அதன் ஆசைகளையும், இச்சைகளையும், உலக இச்சைகளையும், நம்முடைய இருதயத்தில் பொல்லாங்கன் விதைக்கும் பகைகள், விரோதங்கள், கசப்புகள், கோபங்கள், சண்டைகள், வைராக்கியங்கள், பிரிவினைகள் இவை எல்லாவற்றையும் தினமும் ஆவியானவர் துணையோடு சிலுவையில் ஒப்புக் கொடுக்க வேண்டும். **கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்** (கலா. 5:24). இப்படி ஒவ்வொரு நாளும் நீங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்த்து உங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும்போது, நீங்களும் இயேசுவை போல எல்லாவற்றையும் சகித்து மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்த முடியும்.



**உங்களைச் சுற்றி இருக்கும் ஜனங்களிடத்தில் அன்பு செலுத்தாமலும், மற்றவர்களிடத்தில் இரக்கம் காட்டாமலும், மன்னியாமலும் இருக்கும்போது, இயேசுவுக்கு பாத்திரவான்களாக இருக்க முடியாது. "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத். 10:38) என்றார் இயேசு. இயேசுவை பின்பற்றும் ஒவ்வொருவரும் அவர் நடந்தபடியே நடக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இன்று அநேகர் சிலுவையின் அடையாளத்தை வைத்துக் கொண்டு உலக மக்களைப் போல இருக்கிறார்களே தவிர இயேசுவைப் போல் இல்லை. நீங்களும் அவர்களைப் போல இருப்பீர்களானால் இயேசுவுக்கு பாத்திரவான்களாக இருக்க மாட்டீர்கள். எனவே, இயேசு உங்களுக்குச் செய்ததுபோல மற்றவர்களுக்கும் செய்யுங்கள். அப்பொழுது அவருக்கு நீங்கள் பாத்திரவான்களாக இருப்பீர்கள்.**

எனக்கன்பான வாலிபர்களே, சிலுவைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது (1கொரி. 1:18). உங்கள் வாழ்க்கையில் அனுதினமும் சிலுவையை மையமாக வைத்து வாழப் பழகுங்கள். அப்பொழுது நீங்கள் புதுபெலனை பெறுவீர்கள். சிலுவை என் முன்னால் உலகம் என் பின்னால் என்று பாடினால் மட்டும் போதாது. ஒவ்வொரு நாளும் இயேசுவைப் போலச் சிலுவை சுமந்து அவர் நடந்தபடியே நடக்க வேண்டும்.



வரலாறு: சுதர்சன்

# மீண்டும் துளிர்த்த அத்திமரம்

*அன்பு நண்பர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!*

இஸ்ரவேலர் உருவான வரலாற்றைக் குறித்து கடந்த மாதத்தில் நாம் அறிந்து கொண்டோம். இந்த மாதத்தில் இஸ்ரவேல் தேசம் உருவான வரலாற்றைக் குறித்து காணலாம்.

இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் மிகவும் பலுகி பெருகினார்கள் கர்த்தர் இவர்களை ஆசீர்வதித்தார். யோசேப்பை அறியாத வேறொரு ராஜா எழும்பி இஸ்ரவேலரை மிகவும் கொடுமைப்படுத்தினான். இந்த வேளையில் தம்முடைய சொந்த ஜனத்தை மீட்க வேண்டும் என்பதற்காக இஸ்ரவேலரிலிருந்து ஒரு ரட்சகனை கர்த்தர் எழுப்புகிறார் அவர்தான் மோசே.

அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைப் பண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார் (ஆதி. 15:18–20). இவை கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின வசனங்கள்.

**அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்** (யாத் 3:7,8) இவை மோசேயிடம் கர்த்தர் பேசின வசனங்கள்.



எகிப்திலிருந்து விடுதலைப் பெற்று இஸ்ரவேலர் வெளியேறினார்கள். இதற்குக் கர்த்தர் மோசேயை பயன்படுத்தினார். **'கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்'** (யாத். 13:14).

கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு, கர்த்தர் மோசேயின் ஊழியக்காரரான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி: என் தாசனாகிய மோசே மரித்துப் போனான். இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள். நான் மோசேக்கு சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன். வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரிய நதிமட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும் (யோசுவா 1:1-4). இது கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசம்.

மோசேக்கு பிறகு கர்த்தர் யோசுவா மூலமாக இஸ்ரவேலரை கானான் தேசத்திற்கு கொண்டு சேர்த்தார் இதுவே இஸ்ரவேல் தேசமாயிற்று. யோசுவா மூலமாக இஸ்ரவேல் தேசம் 12 கோத்திரத்தாருக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

யோசுவாவுக்கு பின்னர் நியாயாதிபதிகளின் காலமாய் இருந்தது. அதற்குப் பின்னர் சாமுவேல் என்னும் தீர்க்கதரிசியை கர்த்தர் எழுப்பினார். அதன்பின்பு சவுல் என்னும் ராஜாவை ஜனங்கள் தெரிந்து கொண்டார்கள். கர்த்தர் சவுலைத் தள்ளிப் பின்னர் தாவீது என்னும் தன் இருதயத்துக்கு ஏற்ற ஒரு ராஜாவைக் தெரிந்து கொண்டார்.



தாவீது எருசலேமைக் கைப்பற்றி இஸ்ரவேலின் தலைநகரமாக மாற்றினார். இதுவே இஸ்ரவேல் என்னும் தேசம் உருவான வரலாறு.

**அவன் (தாவீது) எப்ரோனிலே யூதாவின்மேல் ஏழுவருஷமும் ஆறுமாதமும், எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் முப்பத்துமூன்று வருஷமும் ராஜ்யபாரம் பண்ணினான்** (2 சாமு. 5:5). தனிப்பட்ட ஒரு மனிதனை (ஆபிரகாமை) தேவன் தெரிந்து கொண்டு, அவனை ஆசீர்வதித்து, இஸ்ரவேல் என்ற இனமாக மாற்றி இஸ்ரவேல் என்னும் தேசமாக உருவாக்க முடியுமானால், உங்களை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணுவது நிச்சயம். நீங்கள் இஸ்ரவேலாய் இருப்பீர்கள் என்றால் கர்த்தர் நிச்சயமாகவே உங்களை ஆசீர்வதித்துப் பெருகப்பண்ணுவார்.

உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள், அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன் (ஏசா. 51:2).

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம். அதுவரை தேவ கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக.



# இது இல்ல Trendu...!

# அன்பிலே மாதிரி

தகவல்: டியூக் ரிச்சர்ட்

ஹலோ பிரண்ட்ஸ் எப்படி இருக்கீங்க, life ஜாலியா போயிட்டு இருக்கா.? இப்ப சமீப நாட்களாக ஒருகாரியம் ட்ரெண்டா அதிகமா ஓடிட்டு இருக்கு. உன் boy friend  எப்படி இருக்கான்! உன் girl friend எப்படி இருக்கா! இப்படிப்பட்ட கேள்விகள் அதிகமாக பரவிக் கொண்டிருக்கிறது. வாலிபர்கள் மத்தியில் girl friend, boy friend வைத்துக்கொள்வது கௌரவமாக கருதப்படுகிறது. இந்த மாயையான வலையில் அநேக வாலிபர்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ வாலிபர்கள் உட்பட பலர் இந்த காரியத்தினால் பாதிக்கப்பட்டு தங்களுடைய படிப்பு, எதிர்காலம், வேலை வாய்ப்புகளை இழந்து கொண்டிருக்கிறார்கள். இந்த உலகத்தில் மூன்று விதமான அன்பு இருக்கிறது.

1) தெய்வீக அன்பு: இது தீயோருக்கும் நல்லோருக்கும் நன்மை செய்யக்கூடிய அன்பு (AGAPE). அதை நாம் வேத புத்தகத்தில் பார்க்கலாம்.

2) Give & Take Policy அன்பு செலுத்தினால் அதற்கு நிகராக அன்பு செலுத்துவது: இது உலகப் பிரகாரமாக மனுஷருக்குள் இருக்கும் அன்பு.

3) மாய்மாலமான அன்பு: தங்களுடைய சுய லாபத்திற்காக மாத்திரம் அன்பு செலுத்துவது. அந்த அன்பில் வஞ்சகம் உள்ளிருக்கும்.

இன்றைக்கு வாலிபர்கள் இந்த மாய்மாலமான அன்பிலே சிக்கி தவித்து தங்களுடைய வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறார்கள். மாறாக, தெய்வீக அன்பு நமக்குள்ளே ஊற்றப்படும் போது, நாம் கிறிஸ்தவ வாலிபர்களாக நம்மை வெளிப்படுத்த முடியும். எதிர் பாலினரோடு நாம் கொள்ளுகிற fantasy அன்பானது நிலையற்றது. ஒருவரது அழகு, பேச்சுத்திறமை, செயல்பாடுகளால் கவரப்பட்டு விழுந்து விடுகிறார்கள். அது ஒருவகையான இச்சையில் உருவாகிறது; ஜாக்கிரதை!

எனக்கு பிரியமான கர்த்தருடைய பிள்ளையே, “அன்பிலே ஜாக்கிரதையாக இரு” என்று தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகிறார். வேத புத்தகத்தில் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட சிம்சோன் என்ற ஒரு வாலிபன், உலக அன்பிற்காக ஏங்கி, புறஜாதி பெண்ணிடம் மயங்கி, அபிஷேகத்தை இழந்து, கடைசியில் கர்த்தர் அவனுக்காக வைத்திருந்த நோக்கத்தை முழுவதுமாக நிறைவேற்றாமல் ஜீவனை இழந்து போனான். எனக்கு பிரியமான வாலிப நண்பர்களே! நீங்கள் எப்படிப்பட்ட அன்பின் கயிறுகளால் கட்டப்பட்டிருக்கிறீர்கள்? இந்த வாலிப வயதில் நமக்கு அதிகமான சோதனை இந்த அன்பில்தான் கடந்து வருகிறது. நாம் சரியான அன்பை தேர்ந்தெடுக்கும் போது அது நன்மையான விளைவை நமக்கு கொடுக்கும். தவறான அன்பை தெரிந்தெடுக்கும் போது பாதிப்பு உண்டாகும்.

இன்னும் கூற வேண்டுமென்றால், இந்த வாலிப வயதில் கர்த்தர் மேல் நீங்கள் அதிகமாய் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுடைய உலகப்பிரகாரமான நட்பு வட்டாரம் ஆரோக்கியம் உள்ளதாக காணப்படும். உங்களுடைய தேவைகளை கர்த்தர் சந்திப்பார். உங்களால் நேசிக்கப்படக்கூடிய தகுந்த துணையை அவர் கொண்டு வருவார். நீங்கள் தலையிட்டால் கர்த்தர் அந்த காரியத்தில் தலையிடமாட்டார். உங்கள் அன்பை பரிசோதித்து பாருங்கள். யார் மேல் எப்படிப்பட்ட அன்பை வைத்திருக்கிறீர்கள்?

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும் பட்சத்தில் தவறான நட்பை ஆவியானவர் உங்களுக்கு காட்டிக் கொடுப்பார். ஆகவே ஃப்ரெண்ட்ஸ் கவனமாய் இருங்கள். தெய்வீக அன்பு நிலையானது; அது கடைசி வரைக்கும் பரலோகமாகிய நித்திய ஜீவனுக்கு கொண்டு செல்லும். உங்களுக்குள்ளே இருக்கிற அன்பு தெய்வீக அன்பாய் இருக்கும் பட்சத்தில் நீங்கள் நன்மை செய்கிறவர்களாக இருப்பீர்கள். உலகத்துக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள். கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துகிறவர்களாய் இருப்பீர்கள். ஆகவே அந்த தெய்வீக அன்பிற்காக இன்றைக்கு பிரயாசம் எடுங்கள். கர்த்தர் உங்களோடு கூட இருப்பாராக. இன்றிலிருந்து உங்கள் டிரெண்ட் தெய்வீக அன்பாக மாறட்டும்.





உண்மை சம்பவம்: கமல் எபனேசர்

# கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள்!

**கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள் என்ற தலைப்பில், இந்த மாதம் யோவான் அப்போஸ்தலரைக் குறித்து தியானிக்க இருக்கிறோம். அவர் கிறிஸ்துவோடு தான் கொண்ட நெருங்கிய ஐக்கியத்தினால், தன் வாழ்வின் இறுதிவரை கிறிஸ்துவுக்காக நிலைத்திருந்தார். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது என்ற நிலையிலேயே வாழ்ந்தவர் (1 யோவான் 1:3-10).**




இயேசு கிறிஸ்துவோடு அவருக்கு இருந்த தனிப்பட்ட ஐக்கியம் மிகவும் அருமையானது: அன்பான சீடர் என்று அறியப்பட்டார், கடைசி இராப்போஜனத்தில் இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்தார் (யோவான் 13:23).

கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் போது இவர்தான் அருகில் இருந்தவர் (யோவான் 19:26). அன்று கிறிஸ்து பட்டப் பாடுகளைக் கண்ட அவர் நிச்சயம் தன் வாழ்நாளில் மறந்திருக்கவே மாட்டார். கிறிஸ்துவின் பாடுகளை குறித்து அறிந்திருக்கிற நாமும் கூட கிறிஸ்துவின்மீது நமக்கிருக்கும் அன்பில் நாளுக்கு நாள் பெருகிட வாஞ்சிப்போம்.

நாம் கிறிஸ்துவின் மீது வைத்திருக்கும் அன்பு மட்டுமே இறுதிவரை நம்மை கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்க வைக்கும். நம்முடைய தீர்மானங்களும், நம்முடைய வைராக்கியங்களும் ஒருநாள் தோற்றுவிடும். யோவான் கிறிஸ்து மீது அன்புகூர்ந்து வாழ்ந்து வந்தபடியால் அவர் இருந்த சிறைச்சாலை அவருக்கு சிறையாய் தெரியாமல், தேவனோடு ஐக்கியப்படும் ஒரு ஜெப அறையாக திகழ்ந்தது. ஆகவேதான் வெளிப்படுத்திய புத்தகத்தை அவரைக் கொண்டு தேவனால் எழுத முடிந்தது.

**நாமும் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து, தனது வாழ்க்கையின் இறுதி வரை அவருக்காக வாழ்ந்த இந்த யோவான் அப்போஸ்தலரைப் போல நாமும் வாழ்ந்திடுவோம். கிறிஸ்து நம்மீது வைத்த அன்பை அதிகமாய் தியானிப்போம். அவரில் அன்புகூர்ந்து அவருக்காக நிலைத்திருப்போம்.**






## தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு கூடுகை



கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மும்பை என 14 இடங்களில் பொதுத் தேர்வுகள் எழுத ஆயத்தப்படும் மாணவர்களுக்கென ACHIEVERS கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். பயத்தோடு, கலக்கத்தோடு தேர்வை எதிர்பார்த்திருந்த மாணவ, மாணவியர் இக்கூடுகையில் கலந்து கொண்டு பயங்கள் நீங்கி, கலக்கங்கள் மாறிப் புதுநம்பிக்கைப் பெற்று கடந்து சென்றனர். வந்திருந்த சுமார் 4500க்கும் அதிகமான மாணவ, மாணவியர்களையும் கர்த்தர் விசுவாசத்தில் பலப்படுத்தி அனுப்பினார். தேவனுக்கே மகிமை!























கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்!

Hi friends...! எல்லாரும் எப்படி இருக்கீங்க? பரப்பரப்பு செய்திகள் என்னும் இத்தொடரின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.

சரி வாங்க friends... நாம தொடருக்குள் போகலாமா? Wait wait. அதுக்கு முன்னாடி ஒரு சந்தோஷமான நற்செய்தியோட இந்தத் தொடர ஆரம்பிப்போமா? இந்த மாதம் ஒரு கொண்டாட்டமான மாதம். என்னனு guess பண்ணிட்டீங்களா? ஆமாங்க நம்ம இயேசப்பா உயிர்த்தெழுந்ததை கொண்டாட போறோம்ல அதுவே ஒரு கொண்டாட்டம் தானே? நமக்காகவே பிறந்து நமக்காகவே மரித்து நமக்காகவே உயிரோடு எழுந்து இப்படி நமக்காகவே எல்லாத்தையும் பண்ணிட்டு இருக்கிற ஒரு தேவன் நமக்குக் கிடைச்சிருக்குறது எவ்வளவு பெரிய பாக்கியம்! நம்ம உயிருள்ள தேவனை ஆராதிக்கிறோம்னு சொல்லும்போதே எவ்வளவு பெருமையா இருக்கு friends. So உங்க எல்லாருக்கும் ஈஸ்டர் தின நல்வாழ்த்துக்கள்.

நமக்காக உயிரோடு எழுந்த நம்ம இயேசப்பா அவர் உயிருள்ளவராய் இருக்கிறார் என்பதை நிரூபிக்க இன்றும் அநேக அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார் இதைத் தான் நாம் ஒவ்வொரு தொடரிலும் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

சரி வாங்க இப்ப தொடருக்குள் போகலாம்.

கி.பி.9ம் நூற்றாண்டில் மிகவும் புகழ்பெற்ற தீர்க்கதரிசியாக விளங்கியவர் எலியா. இவருடைய பெயரின் பொருளே ‘யாவே என் கடவுள்’ என்பதாம். இவருடைய பெயரின் அர்த்தம் இவருக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கும் சம்பவத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒருமுறை தேவன் எலியாவிடம், இஸ்ரவேல் தேசத்தை ஆண்டு கொண்டிருக்கும் ஆகாப் ராஜாவை நோக்கி இந்தத் தேசத்தில் மூன்று வருஷம் மழை பெய்யாதிருக்கும் என்று சொல்லச் சொன்னார். இந்தப் பஞ்சத்திலிருந்து தப்பித்துக் கொள்ள தேவன் எலியாவை கேரீத் ஆற்றண்டையில் ஒளிந்துகொள்ள சொன்னார். மூன்று வருஷம் மழை பெய்யவில்லை என்றால் அந்தத்



தேசத்தில் பஞ்சம் கொடுமையா இருந்திருக்கும் அல்லவா? ஆனால் தேவனோ எலியாவுக்கு non-veg சாப்பாடு கொடுத்தார். இந்த உணவைக் காகங்கள் மூலம் தேவன் எலியாவுக்கு கொடுத்ததுதாங்க மிகுந்த ஆச்சரியம். காகத்தின் கையிலிருந்து நம்மால் எதுவுமே வாங்க முடியாது. ஆனால் அப்படிப்பட்ட காகங்கள் மூலமாகவே தேவன் பல நாட்கள் தினமும் இரண்டு வேளை எலியாவிற்கு அப்பமும் இறைச்சியும் கொடுத்தார்.

**இந்த மாதிரி அற்புதம் எலியாவிற்கு மட்டும்தான் நடக்குமா? இந்தக் காலத்திலும் தேவன் இந்த மாதிரி அற்புதங்களைச் செய்வாரா? என்ற நம்முடைய கேள்விக்கு, ஆமாங்க இப்பவும் நம்ம தேவன் இந்த மாதிரி அற்புதங்களையும் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று உறுதியாகச் சொல்லும் அளவிற்கு, இங்கிலாந்திலிருந்து ஒரு பரபரப்பு செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.**

ஒரு ஏழை குடும்பம் மிகவும் கொடிய வறுமையில் போராடிக் கொண்டிருந்தது. அங்கிருந்த சிறு பிள்ளைகள் சாப்பாட்டிற்கு ஒன்றும் இல்லாமல் பசியோடிருந்தனர். அப்போது அந்தத் தாய், எலியாவை கர்த்தர் எப்படி போஷித்தார் என்பதை பிள்ளைகளுக்குச் சொல்லி விசுவாசத்தை ஊட்டினாள். இரவில் மழையும் பனியும் பெய்ததால், அந்தத் தாய் ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு பிள்ளைகளைப் பசியோடு படுக்க வைத்தாள். ஒரு குழந்தை எழுந்து அம்மா எனக்கு ஒரு சந்தேகம், ஜன்னல் மூடியிருந்தால் கர்த்தர் அனுப்புகிற காக்கா எப்படி வீட்டிற்குள் வரும்? கர்த்தர் அப்பமும் இறைச்சியும் கொடுத்து அனுப்பினால் நமக்குக் கிடைக்காது, காக்கா வரும்படி கதவைத் திறவுங்கள் என்றாள். அந்தத் தாய் தன் பிள்ளையின் விசுவாசத்தால் ஆச்சரியப்பட்டு ஜன்னலைத் திறந்து வைத்தாள். அங்கே வீட்டிற்கு வெளியே மழைக்காக ஒதுங்கி இருந்த அந்த நகர மேயர் இந்தச் சம்பாஷணையை கேட்டுக் கொண்டே இருந்தார். உடனே அவர் ஓடிப்போய் நிறைய உணவுப் பதார்த்தங்களை வாங்கிக் கொண்டு வந்து ஜன்னல் வழியாக எட்டிப் போட்டு விட்டுச் சென்றார். தொப் என்ற சத்தம் கேட்டு பிள்ளைகள் ஓடிப்போய் உணவு பார்சலை எடுத்தார்கள். மிகுந்த ஆனந்தத்துடன் கர்த்தருக்கு நன்றி செலுத்தினார்கள். என்னங்க இங்க காகம் வந்து பார்சல போடும்னு பார்த்தா மேயர் வந்து போட்டிருக்கிறார் என்று சொல்லிக் கேட்கிறீங்களா? இதுல ஆச்சரியமான செய்தி என்னன்னா அந்த மேயரை அவர் நண்பர்கள் அன்போடு ‘காக்கா’ என்று அழைப்பார்களாம்.

***தேவ பிள்ளைகளே!***

**நீங்களும் காகங்களை எதிர்பார்க்கிறீர்களா? எதிர்பார்ப்பது மட்டுமல்ல, அந்தப் பிள்ளைகளைப் போல விசுவாசம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். எனவே உங்கள் விசுவாச ஜன்னல்களை முதலில் திறந்து வையுங்கள். யாருக்கு தெரியும் ஒருவேளை தேவன் நம்மையும் கூடக் காகங்களாய் பயன்படுத்தலாம் அல்லவா? So be ready friends. அடுத்த தொடரில் சந்திப்போம்...**





# ஆசரிப்பு கூடாரம்

தகவல்: மோசஸ்

## மகா பரிசுத்த ஸ்தலம்

கடந்த மாதங்களில் ஆசரிப்பு கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம் மற்றும் அதற்குள் காணப்படும் 3 விதமான காரியங்களைப் பற்றி அறிந்து கொண்டோம். இந்த மாதம் மகா பரிசுத்த ஸ்தலம் அதற்குள் காணப்படும் பொருட்கள், அதன் விவரங்கள்பற்றி அறிந்து கொள்வோமா?



## மகா பரிசுத்த ஸ்தலத்தின் அளவு

இது 15 அடியில் சதுர வடிவில் இருக்கும். இதன் அகலம், நீளம், உயரம் ஒரே அளவில் இருக்கும் (வெளி. 21:16). புதிய எருசலேம் போல் இதுவும் சதுர வடிவமாயிருந்தது.

## மறைவின் திரைச்சீலை (யாத். 26:31-33)

மகா பரிசுத்த ஸ்தலத்தை மறைக்கும் வண்ணமாக இளநீலம், சிவப்பு இரத்தாம்பரம் மற்றும் திரித்த மெல்லிய பஞ்சு நூலினால் ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணி, விசித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்பட்டிருந்தது. சித்தீம் மரத்தினால் செய்த பொன் தகட்டால் மூடப்பட்டு, வெள்ளிப் பாதங்கள்மேல் நின்ற நாலு தூண்களில் இந்தத் திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருந்தது. இந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும்.

வருடத்திற்கு ஒருமுறை பிரதான ஆசாரியன் மட்டுமே இந்தத் திரைச்சீலை வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியும். பரிசுத்தம் இல்லாமல் ஒழுங்கு முறைமைகளைச் சரியாகக் கடைபிடிக்கவில்லை என்றால், உள்ளே நுழைந்தவுடனே மரிக்க நேரிடும். நாம் எப்பொழுது வேண்டுமானாலும் தேவ சமூகத்திற்கு செல்ல வேண்டும் என்பதற்காகவே இயேசு நியாயப்பிரமாண முறைமைகளை மாற்றினார் (மத். 27:51; லூக். 23:45).

இயேசுவின் பரிசுத்த இரத்தம் சிந்தப்பட்டு பாவத்தின் பரிகாரம் செலுத்தப்பட்டதால் திரை கிழிந்துவிட்டது. எந்த சுயத்தால் மனிதன் பாவத்தைச் சம்பாதித்தானோ, அந்த சுயத்தை, அவன் சம்பாதித்த பாவத்தைச் சுமந்த கிறிஸ்துவின் மாம்ச சரீரம் சிலுவையில் கிழிக்கப்பட்டது (எபி.10:19).

கிருபாசனத்தின்மேல் தெளிக்கப்பட்ட பாவ நிவாரணபலியின் இரத்தம் பரிசுத்த தேவன் பாவிகளின் மத்தியில் வாசம் செய்ய இடமளித்தது. அவர் நீதியுள்ளவராகவும், அதே வேளையில் தம்மிடம் விசுவாசத்தோடு வருகிறவர்களை நீதிமான் களாக்குகிறவராகவும் இருந்தார் (ரோமர் 3:26).

## மகா பரிசுத்த ஸ்தலத்தில் என்ன இருந்தது?

### உடன்படிக்கைப் பெட்டி: (யாத். 25: 10-15)

2½ முழ நீளமும் 1½ முழ அகலமும் உயரமுள்ள சித்தீம் மரத்தினால் பொன்னினால் மூடப்பட்ட தண்டுகள் பெட்டியின் பக்கங்களில் இருக்கும் வளையங்களில் பொருத்தப்பட்டிருக்கும். இத்தண்டு கழற்றப்படாமல் இருக்கும். அந்த பெட்டிக்குள் மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரமும், ஆரோனின் துளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் வைக்கப்பட்டிருக்கும்.



### கேருபீன்கள் (யாத்.25: 18- 20)

பொன்னை தகடாக அடித்து அதினால் செய்யப்பட்ட இரண்டு கேருபீன்கள் கிருபாசனத்தின் இரு ஓரங்களிலும் வைக்கப்பட்டிருந்தன. இதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நுழையும் ஆசாரியன் மட்டுமே பார்க்க முடியும். உடன்படிக்கை பெட்டியின் மேல் செட்டைகளை உயர விரித்துப் பறக்கும் நிலையில் கிருபாசனத்தை தொடும்படியும் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய் இருந்தது. பெட்டியைக் காவல் செய்யத் தேவன் கேருபீன்களை (ஆதி. 3:24) வைத்தார். இத்திரைச்சீலையும் கேருபீன்களும் மனிதனுக்கு அவனது பாவநிலையை உணர்த்தின.

### கிருபாசனம்

தூய பொன்னினால் செய்யப்பட்ட கனமான மூடி கிருபாசனம் ஆகும். (யாத். 40:20). உடன்படிக்கைப் பெட்டி கிருபாசனத்தினால் மூடப்பட்டிருக்கும். ‘‘கிருபாசனத்தின் மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்’’ என்று தேவன் உரைத்திருந்தார் (லேவி. 16:2).

கிருபாசனத்தின்மேல் இருந்த இரண்டு கேருபீன்களின் மத்தியில் தேவன் வாசமாயிருந்து மனிதர்களோடு பேசினார் என்று காண்கிறோம். பரிசுத்தம் நிறைந்த அனாதி தேவன் எப்படிப் பாவிகளான மக்கள் மத்தியில் வாசமாயிருந்தார்? என்னும் கேள்வியைக் கேட்பது நியாயமே. எப்படியெனில் கிருபாசனத்தின் மேல் பாவநிவாரண பலியின் இரத்தம் தெளிக்கப்பட்டது. அதனால் தேவன் அங்கே வாசமாயிருக்க முடியும் (லேவி. 16:14, 15).

### ஏன் மகா பரிசுத்த ஸ்தலம்

‘‘மகா பரிசுத்த ஸ்தலத்தில் நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின் மீதிலும் சாட்சி பெட்டியின் மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளை எல்லாம் உன்னோடு சொல்லுவேன்’’ என்று கர்த்தர் சொல்லியிருந்தார். (யாத். 25:22).

*என்ன பிரண்ட்ஸ், மகா பரிசுத்த ஸ்தலம் மற்றும் அதற்குள் எப்படி செல்ல வேண்டும்? எதற்காகச் செல்ல வேண்டும் அங்கு என்னவெல்லாம் இருக்கும் போன்ற பல காரியங்களை அறிந்து கொண்டீர்கள். அடுத்த மாதம் ஆசாரிப்புக்கூடாரம் பற்றிய இன்னும் சுவாரஸ்யமான காரியங்களை அறிந்து கொள்ளலாம். தொடர்ந்து படியுங்கள்!*

Seeds of Revival

# எழுப்புதலின் விதைகள்!


மிஷனெரி பயணம்:
வில்லியம்





டேவிட் ப்ரைனார்ட், 1718ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் தேதி அமெரிக்காவின் கனக்டிகட் (Connecticut) என்ற இடத்தில் உள்ள ஹாடம் (Haddam) என்ற ஊரில் பிறந்தார். இவர் பெற்றோருக்கு 9 பிள்ளைகள். இவரது 9வது வயதில் தகப்பனாரும், 14வது வயதில் தாயாரும் இறந்து போயினர். எனவே சிறு வயது முதல் சோகத்துடனும் மரண பயம் நிறைந்தவராகவும் இருந்தார். அதனால் சிறுவயதிலேயே சந்தோஷத்தையும் விளையாடும் ஆர்வத்தையும் இழந்தார். தீய பழக்கவழக்கங்கள் சந்தோஷத்தை தரும் என்று அதில் ஈடுபட்டு, குற்ற உணர்வினால் பாதிக்கப்பட்டார்.

அந்த சூழ்நிலையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை தேவனுடைய கோபாக்கினையைப் பற்றிய எண்ணம் அவருடைய உள்ளத்தில் ஏற்படவே, ஒருநாள் முழுவதும் உபவாசித்து ஜெபித்த போது பாவ உணர்வடைந்து, தன் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்தார். தேவன் பாவத்தை மன்னித்து, அவருக்குள் ஒரு நிரந்தர சமாதானம் உண்டானது. தனது 21வது வயதில் ஏல் கல்லூரியில் **(Yale College)** சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். அங்கு அவர் வியாதிபட்டதினால், படிப்பை பாதியில் நிறுத்தி விட்டார். 1742 ஆம் ஆண்டு எபிநேசர் பெம்பர்டோன் என்பவர், செவ்விந்தியர்கள் மத்தியில் மிஷனெரி பணி செய்யப்பட வேண்டிய அவசியத்தை சவாலாகப் பிரசங்கித்தபோது, அழைப்பை உணர்ந்து, கரடு முரடான காட்டுமிராண்டி மக்களிடம் செல்லவும், உலகத்தின் சகல வசதிகளையும் விட்டுச் செல்லவும், மரணமே வந்தாலும், தேவ ராஜ்யத்தைக் கட்டுவதற்கு எங்கு வேண்டுமானாலும் செல்ல ஆயத்தமாக இருக்கிறேன் என்று தன்னை அர்ப்பணித்து ஜெபித்தார். தனது அழைப்பை உறுதிப்படுத்திக் கொண்ட டேவிட், ஸ்காட்லாந்தில் உள்ள மிஷனெரி ஸ்தாபனம் செவ்விந்தியர் மத்தியில் மிஷனரிகளை அனுப்புவதை அறிந்து அதில் இணைந்தார்.







நியூயார்க்கில் ஹௌநாமீக் என்ற இடத்தில் தங்கியிருந்து மொழிகளைக் கற்றார். ஜான் சர்ஜெண்ட் மூலம் ஊழியத்திற்கான பல காரியங்களைக் கற்று அறிந்து கொண்டார். இந்தியர்கள் வசிக்கும் ஹௌநாமீக் என்ற இடத்தில் ஊழியத்தையும் ஆரம்பித்தார். அதிகாலையில் எழுந்து ஜெபத்திலும், தியானத்திலும் அதிக நேரம் செலவழித்த பிறகு அங்குள்ள இந்தியருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார். இவரது ஊழிய பாதை மிகவும் கடினம் நிறைந்ததாக இருந்தது. தரையில் சில மரப்பலகைகளை அடுக்கி அதன் மேல் சிறிது வைக்கோலை போட்டு அதை தனது படுக்கையாக்கிக் கொண்டார். கரடு முரடான பாதைகளில் தளராமல் நடந்து சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்தார். பல இன்னல்களை சந்தித்தார். ரொட்டி வாங்க வேண்டுமானால் 15 மைல் நடக்க வேண்டும் என்பதால் செவ்விந்தியர்கள் சாப்பிடும் சாப்பாட்டை சாப்பிட ஆரம்பித்தார்.

சுவிசேஷத்தை எங்கெல்லாம் பிரசங்கித்தாரோ அங்கெல்லாம் மக்கள் இருதயத்தில் குத்துப் பட்டவர்களாக மனந்திருந்தி, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். சிறுவர்கள் கூட இவரது செய்தியினால் தொடப்பட்டனர். சில வெள்ளையர்கள், பைத்தியக்காரன் இவன் என்ன செய்கிறான் என்று பார்க்க வந்தவர்கள் இவரது செய்தி மூலம் தொடப்பட்டார்கள். ஒரே வாரத்தில் 25 பேர் கர்த்தருக்காக எழும்பி தைரியமாக சாட்சி கொடுத்தார்கள்.

1745ஆம் ஆண்டு கிராஸ்விக்ஸ் (Crosswicks) என்ற இடத்தில் எழுப்புதல் உண்டானது. ஒன்றரை வருடத்திற்குள் 150 மக்கள் விசுவாசத்தில் வளர்ந்தனர். இவர் செல்கிற இடங்களில் திருச்சபைகளை கட்டினார்.

ஆங்கிலேயருக்கு விரோதமாக செயல்பட்டு, இந்தியர் மத்தியில் கலவரத்தை ஏற்படுத்துகிறார் என்று கூறி அவரை தண்டிக்க அரசாங்க அதிகாரிகள் பிரயாசப்பட்டார்கள். எதுவும் அவரை சேதப்படுத்த முடியவில்லை.

1746ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவருக்கு கடுமையான இருமலும், காய்ச்சலும் உண்டாகி, உடலில் அதிகமான வலி ஏற்பட்ட போதும், நடந்து சென்று இந்தியருக்கு பிரசங்கம் செய்தார். எழுந்து நடக்கவோ, எழுதவோ வாசிக்கவோ முடியாத நிலையில் இருந்தாலும், ஆவியில் உற்சாகம் உள்ளவராகவே இருப்பார். அவருக்கு காசநோய் முற்றி பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் கூறியபோதும், அதைக் குறித்து கொஞ்சமும் கவலைப்படாமல் எப்போதும் சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் காணப்பட்டார். 5 வருடங்கள் மிஷனெரி பணி செய்து 19 வாரங்கள் படுக்கையிலிருந்த அவர், 1749ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் தேதி தனது 29ம் வயதில் மரணமடைந்தார்.

***அன்பான வாலிபர்களே!***
***இளம் வயதிலேயே சுகவீனம், மற்றும் உபத்திரவங்களைப் பார்த்துச் சோர்ந்து போகாமல் தேவன் அழைத்த அழைப்பிற்கு செவிசாய்த்து, செவ்விந்தியர்களைக் குறித்த ஆத்தும பாரத்தினால் வசதி வாய்ப்புகள் இல்லாத இடத்திற்கு ஒரு எழுச்சி மிகும் எழுப்புதல் விதையாக மடிந்தார். இன்றைக்கு நீங்கள் எப்படி? உங்களுக்கு நம் தேச மக்களைக் குறித்த பாரம் இருக்கிறதா?***
***கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை புரிந்துகொண்டு அவருக்காக வைராக்கியமாக எழும்பிப் பணி செய்ய ஆயத்தமா??***



சாதனை: சுபா

# விண்வெளி நாயகர்

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!
நமக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நிமிடத்தையும் நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதில்தான் நம்முடைய எதிர்காலம் அமைகின்றது. நிகழ்காலத்தில் சோம்பேறியாக இருந்தால் எதிர்காலத்தில் மிகவும் அவதிப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே நிகழ்காலத்தில் நாம் கடினமாக உழைப்போம். வெற்றியை எதிர்காலத்தில் வெற்றியைப் பரிசாகப் பெறலாம். அப்படி தன்னுடைய காலத்தைப் பிரயோஜனப்படுத்தி வெற்றி கண்ட வெற்றியாளரின் வாழ்க்கை உங்களுக்காக...**


தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகே உள்ள ஒரு குக்கிராமத்தில் பிறந்தவர் V. நாராயணன். இவரோடு பிறந்தவர்கள் 5 பேர். குடும்பத்தில் முதல் மகனான இவர், சிறு வயதிலேயே படிப்பின் மீது அதிக ஆர்வம் வைத்திருந்தார். அரசு பள்ளியில் தனது படிப்பைத் தொடங்கி, பிறகு அரசு உதவி பெறும் பள்ளியில் பத்தாம் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று, அரசு தொழில்நுட்ப கல்லூரியில் டிப்ளோமா முடித்தார். அதிக மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றதால், ISROவில் வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. தனது 20வது வயதில் இஸ்ரோவில் டெக்னீசியனாகத் தனது பயணத்தைத் தொடங்கினார். பணியில் இருக்கும் போதே தன்னுடைய வேலைக்குத் தேவையான மேல்படிப்புகளை பயின்று, ஏரோ ஸ்பேஸ் பொறியியலில் Ph.D (Aerospace Engineering) பட்டம் பெற்றார். இஸ்ரோவில் V. நாராயணன் முழு ஆர்வத்தோடும், முழு ஈடுபாட்டுடனும் வேலை செய்தார். இவர் இஸ்ரோவிற்குள் வரும் முன் 2 ஆண்டுகள் தனியார் நிறுவனங்களில் வேலை பார்த்துக்கொண்டே தன்னுடைய தம்பியை இன்ஜினியரிங் படிக்க வைத்துக் குடும்பத்தைக் கவனித்தார். பிறகு இஸ்ரோவில் இணைந்து தன்னுடைய இலட்சியத்திற்காகக் கடினமாக உழைத்தார். ராக்கெட் ஏவுவதில் சாதனை படைக்க வேண்டும் என்பதே இவருடைய கனவாக இருந்தது. படிப்படியாகத் தன்னுடைய பதவியிலிருந்து உயர்ந்து கொண்டே சென்ற நாராயணன் தற்போது இஸ்ரோ தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடினமாக உழைத்ததன் காரணமாக ஐஐடி கோரக்பூரின் வெள்ளி பதக்கம், இந்திய விண்வெளி சங்கத்தில் தங்கப்பதக்கம் போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.





ராக்கெட் ஏவுவதில் சாதனை படைக்க வேண்டும் என்பதே இவருடைய கனவாக இருந்தது.

படிப்படியாகத் தன்னுடைய பதவியிலிருந்து உயர்ந்து கொண்டே சென்ற நாராயணன் தற்போது இஸ்ரோ தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்



**சிறுவயதில் படிக்கப் போதுமான வெளிச்சம் இல்லாமல் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் படித்து, இன்று உலகிற்கு வெளிச்சம் தரும் நபராகத் திரு. நாராயணன் உயர்ந்துள்ளார். எத்தனை கவன சிதறல்கள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு இன்று தமிழ்நாட்டை மட்டுமல்லாமல் உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.**

**இதை வாசிக்கும் நண்பர்களே! உங்களுடைய இலக்கை நிறைவேற்ற இன்றே தொடங்குங்கள். காலம் தாழ்த்தினால் வெற்றி இன்னொருவருக்கு சொந்தமாகி விடும். வெற்றியை நீங்கள் அடைவதும், பரிசாக மற்றவருக்குக் கொடுப்பதும் உங்கள் கையில் தான் உள்ளது.**


## மதுரை மாவட்டத்தில்...

# சிறப்பு வாலிபர் எழுப்புதல் கூடுகை

வாலிபர்கள் ஜெப பாரமும் சுவிசேஷ பாரமும் பெற்று கொண்டு தாங்கள் இருக்கும் பகுதிகளில் எழுப்புதலுக்கு வல்லமையாய் செயல்பட வேண்டும் என்பதற்காகவே...

**NORTH,SOUTH,EAST,WEST தாலுகாவில்...**

**திருமங்கலம் தாலுகாவில்...**

**நாள்: ஏப்ரல் 14 (திங்கள் கிழமை)**

**நேரம்: காலை 9:00 - மாலை 4:00**



இடம்: ஏலிம் AG சபை,
கூடல்நகர், மதுரை

செய்தியும், ஜெபமும்:
**சகோ. சாம் ஜெபராஜ்**

இடம்: சுகஜீவ தேவ சபை, சீயோன் நகர்
(மாஸ் மஹால் அருகில்), மறவன் குளம்,
திருமங்கலம், மதுரை.

செய்தியும், ஜெபமும்: **சகோ. அவினாஷ்**



தொடர்புக்கு: 97509 55548

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (6th April)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (12th April)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,Nearby MGM Plaza, [Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2nd SUNDAY (13th April)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre, 16B Naveen Nest Apartment,Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Grace Auto
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

VILLUPURAM (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

ERODE (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## *EVERY 3rd SATURDAY (19th April)*

PERAMBALUR (5PM -8PM)
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

## *EVERY 3rd SUNDAY (20th April)*

TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

TRICHY (3 PM)
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur. 9489775075 |
8344119000

CHENNAI (3 PM)
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing, Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

NALUMAVADI (3PM -5:30PM)
Tabernacle of God, Nalumavadi
9442885315

JEBAMALAI (2 PM)
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre, 1S.A. Rice Mill
Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kottupalayam
Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kamlambal Street,
Readspet,
Kangareddy palli,
9487734603

## *EVERY 4th SUNDAY (27th April)*

THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

MUMBAI-MALAD (4PM – 6PM)
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315

THISAYANVILAI (2:30 PM TO 5:30 PM)
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

நிகழ்வு: ஜெயசீலன்



# நான் ஒரு ஜெப வீரன்

**என் அன்பு வாலிபப் பிள்ளைகளே!**

ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் உங்களை வாழ்த்துகிறேன். நான் ஒரு ஜெப வீரன் என்ற தலைப்பில் சகரியாவின் வேண்டுதல் ஜெபத்தினால் கிடைத்த ஆசீர்வாதத்தைப் பற்றி கடந்த இதழில் பார்த்தோம்.

இந்த மாதம் ...

## கண்ணீரின் ஜெபம்!

எப்பிராயீம் என்ற மலைதேசத்தில் ராமதாயீம் என்ற ஒரு அழகிய கிராமத்தில் வாழ்ந்து வந்தது எல்க்கானாவின் குடும்பம். எல்க்கானா என்றால் தேவனின் ஆட்சி என்று பொருள். இவருக்கு அன்னாள், பெனின்னாள் என்ற இரு மனைவிகள் இருந்தார்கள். அன்னாளுக்கோ பிள்ளை இல்லை. பெனின்னாளுக்கு பத்துப் பிள்ளைகள் இருந்ததாக (1 சாமு.1:2,8) வேதம் கூறுகிறது. அப்படியே 10ம் வசனத்தைப் பார்க்கும்போது அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது'... (1 சாமு 1:10) என இந்த வேதபகுதி தொடங்குகிறது.

### அழுதது யார்? எதற்காக அழுதார்? எந்தச் சூழ்நிலையில் அழுதார்? அவரது ஜெபம் கேட்கப்பட்டதா?

எப்பிராயீம் மலைதேசத்தில் உள்ள சீலோவிற்கு, தன் இரு மனைவிகளையும், பிள்ளைகளையும் அழைத்துச் சென்று, அங்கே கர்த்தருக்கு பலி செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் எல்க்கானா. சீலோ என்பதற்கு இளைப்பாறுமிடம் என்று பொருள். சற்று இளைப்பாறி கர்த்தரைப் பணிந்து கொள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்திலும்கூட, பெனின்னாள் (1 சாமு. 1:6) அன்னாளுக்குப் பிள்ளை இல்லாத குறையைச் சுட்டிக்காட்டி, அவள் துக்கப்படும்படியாக, அவளை மிகவும் விசனப்படுத்தி, மனமடிவாக்குவாள்.



அன்னாளோ, பெனின்னாளின் காயப்படுத்தும் வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல், மனமுடைந்து, சாப்பிடாமல் அழுது கொண்டேயிருப்பாள். எல்க்கானா தன் மனைவியை வெறுக்கவில்லை. அவளை அதிகமாய் நேசித்து, இரட்டிப்பான பங்கு கொடுப்பார். ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? என விசாரித்துத் தேற்றினாலும் அன்னாளின் மனம் ஆறுதல் அடையவில்லை. ''எத்தனையோ முறை இந்தச் சீலோவிற்கு வந்து சென்றுவிட்டேன். இந்த முறை கர்த்தரின் கரத்திலிருந்து ஒரு அற்புதத்தைப் பெறாமல் ஊர்



திரும்பக் கூடாது'' என்ற வைராக்கியத்துடன், சேனைகளின் கர்த்தாவே (எபிரெய மொழியில் யெகோவா சபயோத்) எனக்கொரு ஆண் குழந்தையைத் தாரும் என, தன் இருதயத்தின் பாரங்களை சேனைகளின் கர்த்தருடைய சமூகத்திற்கு சென்று வெகுநேரம் கண்ணீரோடு ஜெபித்தாள்.

தூரத்திலிருந்து ஆலயத்தின் தலைமை குரு ஏலி, அன்னாளைப் பார்த்து, மது அருந்தி, கடவுள் பயமின்றி வெகுநேரமாய் ஆலயத்திற்குள், உளறிக் கொண்டிருக்கிறாள்; என நினைத்து, அன்னாளின் நிலமையை அறியாமல், குடிகாரியெனச் சொல்லாமல் சொல்லி (1 சாமு. 1:14) திட்டுகிறார். மதகுரு என்ற நிலையிலும் ஏலியால் அன்னாளைப் புரிந்து கொள்ள இயலவில்லை. 40 ஆண்டுகள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்த ஒரு அனுபவம் பெற்ற நியாயாதிபதி என்ற நிலையிலும் அன்னாளைப் புரிந்து கொள்ள இயலவில்லை. கூடவே இருக்கிற பெனின்னாளாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. அன்னாளைப் புரிந்து கொள்ள ஒருவருமில்லை. ஆனால் சேனைகளின் கர்த்தரோ மனுஷன் பார்க்கிறபடி பாராதவர். அன்னாளின் இருதயத்தின் வேதனையையும், ஏக்கத்தையும், தன் பாதத்தில் அவள் வடித்த கண்ணீரையும் பார்த்தார். அன்னாளின் ஜெபத்தைக் கேட்டு, சாமுவேல் என்ற ஆண் மகனைக் கொடுத்து அவளின் கண்ணீரை மாற்றினார். அந்த சாமுவேல் இன்றுவரை எல்லோராலும் பேசப்படுகிறார், பிரசங்கிக்கப்படுகிறார்.

*அன்னாளின் ஜெபத்தைக்கேட்டு, கர்த்தர் தந்த 17வது தலைமுறையில் வந்த சாமுவேல்,*
*1. லேவியனாய்*
*2. ஆசாரியனாய்*
*3.பிரதான ஆசாரியனாய்*
*4. மகாப் பிரதான ஆசரியனாய்*
*5. தீர்க்கதரிசியாய்*
*6. தீர்க்கதரிசிகளின் தலைவனாய்*
*7. நியாயதிபதியாய், இராஜாக்களை உருவாக்குகிறவனாய் பல்வேறு நிலைகளில் தன் ஊழியத்தை நிறைவேற்றக் கர்த்தர் கிருபை செய்தார்.*

*என் அன்பு செல்வங்களே! பிறரால் அவமதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றீர்களோ? ஆண்டுகள் கடந்து கண்ணீர் வடிக்கின்றீர்களோ? சேனைகளின் கர்த்தரை நோக்கிப் பாருங்கள். அன்னாளின் கண்ணீரைக் கண்டவர் உங்கள் கண்ணீரையும் பார்த்து உங்களுக்கும் அற்புதத்தைச் செய்து உங்களையும் அப்படியே ஆசீர்வதிப்பார்! ஆமென்!*



ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு

ஏப்ரல் 2025

## இளம் வயது கர்ப்பம்

இளம் வயது கர்ப்பம் இந்தியாவில் நான்கு பெண்களில் ஒருவர் 18 வயதுக்கு முன் திருமணம் செய்து கொண்டவராகவும், 15 முதல் 19 வயதுடைய பெண்களில் 7.8 சதவீதம் பேர் கர்ப்பமாக அல்லது தாய்மார்களாக இருக்கிறார்கள் எனத் தேசிய குடும்ப நல ஆய்வில் தெரிய வந்துள்ளது. தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் கருத்தரித்த திருமணமான பெண்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. அதே நேரம் இளம் வயதில் கர்ப்பமடைதல் அதிகரித்துள்ளது. கடந்த 2019-20ல், 11,772ஆக இருந்த இளம் வயது கர்ப்பங்களின் எண்ணிக்கை, 2023-24ம் ஆண்டில் 14,360 ஆக அதிகரித்துள்ளது எனப் பொது சுகாதாரத்துறை ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, இளம் வயதில் கர்ப்பமாவது 20% அதிகரித்துள்ளது. மேலும் கடந்த ஆண்டு கருத்தரித்த பெண்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 1.5% பேர் இளம் வயது பெண்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

### ஜெபக்குறிப்பு!

*1. இளம் வயதில் கர்ப்பம் தரிக்கும் இளம் தலைமுறையினருக்கு விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.*

*2. இச்சையை தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும், இளம் பெண்களுக்கு எதிர்காலத்தைக் குறித்த பயம் உண்டாகவும் ஜெபிப்போம்.*

*3. வாலிப வயதில் கர்த்தரை அறிந்து கொள்ளவும், கர்த்தரைக் குறித்த பயம் உண்டாகவும் ஜெபிப்போம்.*

*4. காதல் என்ற வலையில் சிக்கி இளம் வயதில் கற்பை தொலைத்து தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டிருக்கும் வாலிப சமுதாயம் கர்த்தர் பக்கமாய் திருப்பப்பட ஜெபிப்போம்.*

## வறுமை நிலை

வறுமை ஒழிப்பில் 51.9% வறுமை விகிதத்துடன் இந்தியாவின் மிகவும் ஏழ்மையான மாநிலமாக பீகார் உள்ளது. மிகவும் பின்தங்கிய மாநிலமாக பீகார் உள்ளது. அடுத்து ஜார்கண்ட், அதனைத் தொடர்ந்து உத்தர பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் உள்ளது. இவற்றுக்கு அடுத்த இடத்தை மேகாலயா பிடித்துள்ளது. மேலும் உத்தர பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் மாநிலங்கள் 3 மற்றும் 4 வது இடங்களைப் பிடித்துள்ளன. இந்நிலையில் கோவாவில் வறுமை வேகமாகக் குறைந்து வருவதாகவும் அதேபோல ஜம்மு காஷ்மீர், ஆந்திர பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களிலும் வறுமை குறைந்து வருகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவிலேயே கேரளாவில் மொத்த மக்கள் தொகையில் 0.71% மக்கள் மட்டுமே வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்றனர். கோவாவில் 3.76%, சிக்கீமில் 3.82%, தமிழ்நாட்டில் 4.89% மற்றும் பஞ்சாபில் 5.59% வறுமை நிலவுகிறது.

### ஜெபக்குறிப்பு!

*1. இந்தியாவில் காணப்படும் வறுமை நிலை முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.*

*2. இந்தியாவின் பின்தங்கிய மாநிலமான பீகாரில் காணப்படும் வறுமை நிமித்தம் மக்கள் பாதிக்கப்படுவது முற்றிலும் மாறி, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.*

*3. அத்தியாவசிய பொருட்களான அரிசி மற்றும் கோதுமை குறைந்த விலைக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்க ஜெபிப்போம்.*

*4. இந்திய அரசாங்கம் இதற்குத் தகுந்த முயற்சிகள் எடுக்க ஆவியானவர் தலைவர்களோடு இடைபட ஜெபிப்போம்.*





## விவசாயத் துறை

இந்தியாவில் 11.8 கோடி விவசாயிகள் இருக்கின்றார்கள். இந்தியாவில் 18 கோடி ஹெக்டேர் விவசாய நிலம் உள்ளது. உலக அளவில் உணவு உற்பத்தியில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது. வருடத்திற்கு 341 மில்லியன் டன் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. கோதுமை, அரிசி மற்றும் கரும்பு உற்பத்தியில் உலக அளவில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 64 கோடி மக்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதில் 80% பேர் விவசாயத்தையே சார்ந்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளில் 2.20 லட்சம் விவசாயிகள் கடன் பிரச்சனை, வறுமை மற்றும் பலவிதமான சூழ்நிலைகளினால் தற்கொலை செய்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 74 மில்லியன் டன் உணவு விரயமாகிறது. இதனால் உணவு பஞ்சம் வர வாய்ப்பும் உள்ளது.

### ஜெபக்குறிப்பு!

1. இந்தியாவில் உள்ள 11.8 கோடி விவசாயிகள் இரட்சிக்கப்படவும், வாழ்வாதாரம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.
2. விவசாயிகளுக்கு நன்மை தரும் திட்டங்களை அரசாங்கம் கொண்டு வர ஜெபிப்போம்.
3. விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படவும், பயிர்கள் நல்ல விளைச்சலைக் கொடுக்கவும் ஜெபிப்போம்.
4. தற்கொலையைத் தூண்டுகிற ஆவிகள் நம் தேசத்தை விட்டு முற்றிலும் நிர்மூலமாக்கப்பட ஜெபிப்போம்.



## காவல் துறை

இந்தியாவில் 13,765 காவல் நிலையங்கள் உள்ளன. 20 லட்சம் காவல் அதிகாரிகள் பணிபுரிகிறார்கள். 2,15,504 பெண் காவல் அதிகாரிகள் இருக்கிறார்கள். இதில் தமிழ்நாட்டில் 98,078 ஆண் காவலர்கள், 76,599 பெண் காவலர்கள் என 1,35,042 காவலர்கள் பணியாற்றுகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 1312 காவல்நிலையங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 9365 காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கிறது.

### ஜெபக்குறிப்பு!

1. இந்தியாவில் உள்ள 21 லட்சம் காவல்துறை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
2. எல்லா காவல் துறை அதிகாரிகளும் நேர்மையாகவும், சுயநலம் இல்லாமல் செயல்படவும் ஜெபிப்போம்.
3. காவலர்களுக்குள் காணப்படும் மனஅழுத்தங்கள் மறையவும், வேலைப்பளு குறைக்கப்படவும், காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவும் ஜெபிப்போம்.
4. காவல் அதிகாரிகள் இரட்சிக்கப்படவும், காவல்துறையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.



# செய்திகள்!

## வேலைவாய்ப்பு அதிகரித்தாலும் சம்பளம் உயரவில்லை:
### நிதி ஆயோக் உறுப்பினர் கவலை



கடந்த 7 ஆண்டுகளில் தொழிலாளர்கள் விகிதம் அதிகரித்து வருகிறது. மக்கள் தொகை வளர்ச்சியைவிட வேலைவாய்ப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதில் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும், வேலைவாய்ப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் போக்கு தெரிகிறது. கடந்த 2017-18-ம் ஆண்டில் தொழிலாளர் எண்ணிக்கை 34.7 சதவீதமாக இருந்தது. இது 2023-24-ம் நிதியாண்டில் 43.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. சம்பள தரவுகளை ஆய்வு செய்தால், தொழிலாளர்களின் சம்பளம் கடந்த 7 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. ஆனால் பணவீக்கத்துக்கு ஏற்ப சம்பளம் உயரவில்லை.

இதற்கு தொழிலாளர்களின் திறன் குறைவுதான் காரணம். பல நாடுகளின் தரவுகளை ஆய்வு செய்தால், இங்கு தொழிலாளர்களின் திறன் குறைவாக உள்ளது. இதை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதேபோல் மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். திறன் அதிகரிக்கும்போதுதான், உற்பத்தி அதிகரிக்கும், ஊதியமும் அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**- இந்து தமிழ் திசை, 03 மார்ச்.**

## கடந்த 10 ஆண்டுகளில் நீதிமன்ற வழக்குகளுக்காக மத்திய அரசு ரூ. 400 கோடி செலவு



கடந்த 10 ஆண்டுகளில் நீதிமன்ற வழக்குகளுக்காக மத்திய அரசு ரூ.400 கோடிக்கும் அதிகமாக செலவு செய்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் கூறியுள்ளதாவது: கடந்த 2023-24-ம் நிதியாண்டில் நீதிமன்ற வழக்குகளுக்காக ரூ.66 கோடியை மத்திய அரசு செலவழித்துள்ளது. கடந்த 2022-23-ம் நிதியாண்டை விட இது ரூ.9 கோடி அதிகமாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் நீதிமன்ற வழக்குகளுக்காக ரூ.409 கோடிக்கும் அதிகமாக மத்திய அரசு செலவு செய்துள்ளது.

2014-15-ம் நிதியாண்டில் ரூ.26.64 கோடியும், 2015-16-ல் ரூ.37.43 கோடியும் செலவு செய்யப்பட்டுள்ளது.

**7 லட்சம் வழக்கு நிலுவை:** நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் மத்திய அரசு சம்பந்தப்பட்ட வகையில் சுமார் 7 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் மத்திய நிதியமைச்சகம் சார்பில் மட்டும் சுமார் 2 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவ்வாறு அந்த புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- இந்து தமிழ் திசை,27 பிப்ரவரி.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

தகவல்: எப்சிபா

# கிறிஸ்தவம்

## Hi சகா Hi சகி







''பூர்வ பாதைகள் எதுவென்று விசாரித்து அதிலே நடவுங்கள்'', என்ற வாக்கின்படி, நம் பழமையான கிறிஸ்தவம் எப்படி இருந்தது என்றும், இப்போது கிறிஸ்தவம் எப்படி **Modern** ஆகிவிட்டது என்றும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

முக்காடு போடுதல் என்பது இன்று விவாதத்துக்கு உள்ளாகிவிட்டது.

முன்பு ஒரு சபைக்குள் நுழைந்தால் பெண்கள் அனைவரும் ஒன்று போல் முக்காடிட்டு இருப்பதைக் காண முடியும், தங்கள் தாய்/சகோதரி முக்காடிடுவதைப் பார்த்துச் சிறு குழந்தையும் முக்காடு போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கும்.

இன்று ஒரு சபைக்குள் நுழைந்தால் சிலர் முக்காட்டையும், சிலரின் வித விதமான சிகை அலங்காரங்களையும் தான் பார்க்க முடிகிறது.

தேவன் ஆணையும் பெண்ணையும் சமமாகத் தான் பார்க்கிறார். ஆனால் முக்காடு போடுதல் சபையில் அந்தப் பாலின சமநிலையை கெடுப்பதாகச் சிலர் விவாதிக்கின்றனர். சிலர் முக்காடு போடுதல் மிகுந்த பய பக்திக்குரியது என்றும் முக்காடு போடாதவர்களை சபைக்குள் அனுமதிக்க கூடாது, என்றும் விவாதிக்கின்றனர்.

1960களின் தொடக்கம் வரை வெளிநாட்டு சபைகளிலும் கூடப் பெண்கள் அனைவரும் தொப்பி அல்லது **scarf** போன்ற துணிகளாலும் தங்கள் முடியை மறைத்து இருந்தனர். 1 கொரிந்தியர் 11:4,5ஐ காண்பித்து அதைப் பாலின சமநிலை அற்றது என்று சர்ச்சைக்கு உள்ளாக்குகின்றனர்.

மத். 18:7-9 வசனங்களின் அடிப்படையில், நமது தலை பின்னலோ தலை அலங்காரமோ மற்றவர்களுக்கு இடறலாய் இருக்கக் கூடாது என்பது என் கருத்து.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கலாச்சாரம் இருக்கின்றது. இங்கிலாந்து தேசத்தில் ராணியை பார்த்தால், அவர்களுக்கு மரியாதை தரும் பொருட்டு லேசாகத் தலை தாழ்த்தி குனிய வேண்டும். அதுபோல, அரபு தேசத்தில் அந்நாட்டின் இளவரசரைச் சந்தித்தால் அதற்கு ஒரு வித மரியாதை செலுத்த வேண்டும். அதுபோல நம் இயேசு ராஜாதி ராஜா, பரலோக தேவன். அவரைக் கனம் பண்ணுவதற்கு நாம் முக்காடு போட வேண்டியது அவசியம். யார் முக்காடு போடுறாங்க போடல, முக்காடு போடுவது சரியா தவறா என்பதை விட, நம்மை ஆட்கொண்ட நம் நேசரை, இயேசுவை கனப்படுத்த நாம் முக்காடிட வேண்டும்.

**பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்** (சங் 96:9).

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 03 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

**சேலம்** மாவட்டம்

| | இளம்பிள்ளையில்.. | கல்வராயன்மலையில்... |
|---|---|---|
| நாள்: | ஏப்ரல் 14, (திங்கட்கிழமை) | மே 24, (சனிக்கிழமை) |
| நேரம்: | காலை 9:30 - மதியம் 1:30 | மாலை 6:00 - இரவு 9:00 |
| இடம்: | சமுதாய கூடம் சின்னப்பம்பட்டி மெயின் ரோடு, இடங்கணச்சாலை, இளம்பிள்ளை. | ஸ்ரீ லட்சுமி அம்மாள் திருமண மண்டபம் பிரபாவதி பள்ளி அருகில், சேலம் ரோடு, கருமந்துறை. |
| தேவ செய்தி: | சகோ. சதீஷ்குமார் | சகோ. சாம் ஜெபராஜ் |
| தொடர்புக்கு: | 9629637594, 9629298785, 9943593528 | 93858 35867, 9597754872, 9962085523 |

## மும்பையில்...

நாள்: **ஏப்ரல் 5**, (சனிக்கிழமை)
நேரம்: மாலை 5:00 - இரவு 9:00
இடம்: RP Mangala School, Opp Bank of Maharashtra, Near Railway Station, Thane - East
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு: 90048 82470

## அருப்புக்கோட்டையில்...

நாள்: **ஏப்ரல் 27**, (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 4:00 - இரவு 7:00
இடம்: கார்மேல் பர்வதம், ஸ்டேட் பேங்க் எதிர்ப்புறம், (புதிய பஸ் நிலையம் அருகில்)
செய்தியும், ஜெபமும்: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு: 9750955548


சகோ. சாம் ஜெபராஜ் — சகோ. அவினாஷ் — சகோ. சதீஷ்குமார்